மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

| | | | |
|---|---|---|---|
| 2022-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7-ம் நாள் புதன்கிழமை வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | **மோகன்** | தொழில் : | |
| த.பெ: | மாயாண்டிசெட்டியார் | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**7.09.2022 OS No. 16/2020 வா.சா.1 மோகன் ஆஜர்**

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

1.நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். நான் வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் ஏற்கனவே நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து காண்பித்து பின்பு நான் அதில் கையெழுத்து செய்துள்ளேன். பிராமண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட மானாமதுரை உரிமையியல் நீதிமன்றம் மு.வ.எண்.284/1981 தீர்ப்புரை நகல் தாக்கல் செய்கிறேன். **(தீர்ப்புரை வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**2.** தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட சிவகங்கை சார்பு நீதிமன்ற மேல் முறையீட்டு வழக்கு எண்.158/1983 தீர்ப்புரை நகல் தாக்கல் செய்கிறேன். **(தீர்ப்புரை வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை இரண்டாம் மேல் முறையீட்டு வழக்கு எண்.25/1999 தீர்ப்பாணை நகல் தாக்கல் செய்கிறேன். **(தீர்ப்பாணை வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை இரண்டாம் மேல் முறையீட்டு வழக்கு எண்.25/1999 தீர்ப்புரை நகல் தாக்கல் செய்கிறேன். **(தீர்ப்புரை வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**3.** 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த ஆவண எண்.3342/2019க்கான கிரைய ஆவண சார்பதிவக கணினி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** தாவா சொத்தை காட்டக் கூடிய 2 புகைப்படங்கள் தாக்கல் செய்கிறேன். **(புகைப்படங்கள் வா.சா.ஆ.6 வரிசை (2 எண்ணம்)ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தாவா சொத்தின் புலவரைபடம் நகல் தாக்கல் செய்கிறேன். **(புலவரைபடம் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**4.**தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட 1ம் பிரதிவாதி மாவட்ட பதிவாளரிடம் கொடுத்த மனு நகல் தாக்கல் செய்கிறேன். **(மனு நகல் வா.சா.ஆ.8**

**ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட நான் மாவட்ட பதிவாளரிடம் கொடுத்த மனு நகல் தாக்கல் செய்கிறேன். **(மனு நகல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** 08.11.2016ம் தேதி சிவகங்கை மாவட்ட பதிவாளரின் செயல் முறை ஆணை அசல் தாக்கல் செய்கிறேன். **(செயல்முறை ஆணை அசல் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** 08.08.2021ம் தேதியிட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவு அசல் தாக்கல் செய்கிறேன். **(வருவாய் கோட்டாட்சியர் உத்தரவு அசல் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**5.**தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட திருப்பாச்சேத்தி ஊராட்சி மன்ற தலைவர் சான்று மற்றும் வீட்டு வரி ரசீதுகள் அடங்கிய கோப்பின் நகல் தாக்கல் செய்கிறேன். **(சான்று மற்றும் வீட்டு வரி ரசீதுகள் நகல் வா.சா.ஆ.12 வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** 16.03.2020 ம் தேதியிட்டு நான் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பிய புகார் மனு புகைப்பட நகல் மற்றும் அஞ்சல் ரசீது அடங்கிய கோப்பு தாக்கல் செய்கிறேன். **(புகார் மனு மற்றும் அஞ்சல் ரசீது வா.சா.ஆ.13 வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** 12.06.2020 ம் தேதியிட்டு நான் திருப்பாச்சேத்தி காவல் ஆய்வாளருக்கு அனுப்பிய புகார் மனு கை நகல் தாக்கல் செய்கிறேன். **(புகார் மனு வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

6.திருப்பாச்சேத்தி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு ஏற்பு ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். **(புகார் மனு ஏற்பு ரசீது வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கொடுத்த புகார் மனு ஏற்பு ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். **(புகார் மனு ஏற்பு ரசீது வா.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** தாவா சொத்திற்கான நத்தம் நிலவரிதிட்ட துய அடங்கல் பதிவேடு சான்றிட்ட நகல் 2 எண்ணம் தாக்கல் செய்கிறேன். **(அடங்கல் பதிவேடு வா.சா.ஆ.17 வரிசை (2 எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** தாவா சொத்தை காட்டக் கூடிய 2 புகைப்படங்கள் சிடியுடன் தாக்கல் செய்கிறேன். **(புகைப்படங்கள் மற்றும் சிடி வா.சா.ஆ.18 வரிசை (2 எண்ணம்)ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

7.சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை இரண்டாம் மேல் முறையீட்டு வழக்கு எண்.25/1999ல் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடான REP.A.(MD)No.SR 3648/2020ன் நகல் தாக்கல் செய்கிறேன். **(REP.A.(MD)No.SR 3648/2020ன் நகல் வா.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை:**

1. நான் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கில் கிரைய பத்திரங்களை ரத்து செய்யவும் கேட்டுள்ளேன்.

வா.சா.ஆ.1ல் மாயாண்டிசெட்டியாரும் பாக்கியமும் வாதிகள் என்றால் சரிதான். மாயாண்டிசெட்டியார் எனது அப்பா ஆவார். பாக்கியம் எனது சித்தப்பா ஆவார். மானாமதுரை நீதிமன்றத்தில் வா.சா.ஆ.1ன் தீர்ப்புரையில் மாயாண்டி செட்டியார், பாக்கியம் ஆகியோர்களுடன் சேர்ந்து இறந்து போன அய்யாவு செட்டியார், ஆறுமுக செட்டியார் இவர்களுக்கு சேர்த்து பூர்விக பாத்தியம் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.1ன் படி மாயாண்டி செட்டியார், பாக்கியம் செட்டியாருக்கு பாத்தியம் இல்லை என தீர்ப்பாகியுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1லேயே நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு அந்த பரிகாரமும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அதன் பேரில் எனது அப்பாவும், சித்தப்பாவும் மேல்முறையீடு சென்றார்கள் என்றால் சரிதான். மேல் முறையீட்டிலும், கீழமை நீதிமன்ற தீர்ப்பையே ஊர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரிதான். முதல் மேல்முறையீட்டை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார்கள் என்றால் சரிதான்.

3. சென்னை உயர்நீதிமன்றத்தின் மேல் முறையீட்டிலும் 12 பேர் வாதிகளாக இருந்து மேல்முறையீடு செய்தார்கள் என்றால் சரிதான். மேல் முறையீட்டிலும் கீழமை நீதிமன்றமான மானாமதுரை தீர்ப்பினை ஊர்ஜிதம் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். 2ம் மேல்முறையீட்டை எதிர்த்து சீராய்வு மனு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். சென்னை உயர்நீதிமன்றத்தின் மேல் முறையீட்டிலும் 12 பேர் வாதிகளாக இருந்து மேல்முறையீடு தாக்கல் செய்துள்ள நிலையில் நான் மட்டும் ஏன் இந்த வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் 4 பேர் எனக்கு வழக்கு நடத்த அதிகாரம்(ீறநச) கொடுத்துள்ளார்கள். மற்றவர்களை பிரதிவாதிகளாக காட்டியுள்ளேன்.

4. எனக்கு 4 பேர் கொடுத்ததாக சொல்லும் அதிகார ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு எந்த அதிகார ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றாலும், அவ்வாறு அதிகாரம் கொடுத்ததாக எனது பிராதிலும் முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் பிராதிலும், நிருபணவாக்குமூலத்திலும் சொல்லவில்லை. தாவா சொத்து எனக்கு மட்டும் தனித்து பாத்தியம் என்பதற்கு ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி ஈஸ்வரன் 2ம் பிரதிவாதிக்கு பதிவு கிரையமாக எழுதி கொடுத்து அவர் வீடு கட்டி விட்டார் என்றால் வழக்கு நிலுவையில் இருக்கும் போதுதான் வீடு கட்டினார்.

5. அந்த வீட்டிற்கு அவர் மின்சார இணைப்பு பெற்று ரசீது பெற்று அனுபவம் செய்து வந்தார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தில் நான் அனுபவம் செய்யவில்லை என்றாலும், பிரதிவாதி தாவா சொத்தில் ஒரு பகுதியில் வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறார் என்றாலும், தாவா சொத்தின் மொத்தத்திலும் வீடு

கட்டியுள்ளார். பிரதவாதி வீடு கட்டியுள்ள பகுதிக்கு கிழக்கே நான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். அது தற்சமயம் காலியிடமாக உள்ளது.

6. நான் அவ்வாறு தாவா சொத்திற்கு கிழக்கே நான் அனுபவிக்கவே இல்லை என்றால் சரியல்ல. கீழமை நீதிமன்றங்கள் மற்றும் உயர் நீதிமன்றத்திலும் சொத்து எங்களுக்கு பாத்தியமில்லை என முடிவாகிவிட்டது என்றாலும் தாவா வழக்கை தாக்கல் செய்ய எனக்கு எந்த அதிகாரம் இல்லை என்றாலும் சரியல்ல. பிராதில் கோரியுள்ள எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken down by me in open court
read over/ interpreted to the witness
in Tamil and acknowledged by him,
her to be correct.

District Munsif Cum
Judicial Magistrate,
Thiruppuvanam.